செ.வெ.எண் : 12/ செப்டம்பர் நாள் : 09.09.2021

## இராமநாதபுரம் மாவட்டம்

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, 12.09.2021 அன்று இராமநாதபுரம் மாவட்டத்தில் மாபெரும் கொரோனா தடுப்பூசி செலுத்தும் முகாம் 650 க்கும் மேற்பட்ட இடங்களில் நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ஜெ.யு.சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள் தகவல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, 12.09.2021 அன்று மாநிலம் தழுவிய மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம் நடைபெற உள்ளது. அதனடிப்படையில் இராமநாதபுரம் மாவட்டத்தில் இதுவரை கொரோனா தடுப்பூசி போடாதவர்கள், இரண்டாவது தவணை போட வேண்டியவர்கள் பயனடையும் வகையில் கொரோனா தடுப்பூசி முகாம் காலை 7.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை என நகராட்சி, பேரூராட்சிகளில் உள்ள வார்டு பகுதிகளிலும், ஊராட்சி மற்றும் கிராம பகுதிகளிலும், அரசு ஆரம்ப சுகாதார மையம், அரசு மருத்துமனை, அங்கன்வாடி மையம், சமுதாயக் கூடங்கள், என 650 க்கும் மேற்பட்ட இடங்களில் நடத்தப்படவுள்ளது.

இந்த வாய்ப்பினை பொது மக்கள் அனைவரும் பயன்படுத்தி கொள்ள வேண்டும். இந்த முகாம்களில் அரசு மருத்துவர்கள், அரசு மற்றும் தனியார் மருத்துவமனை செவிலியர்கள், சுகாதார பணியாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் கல்வித்துறை அலுவலர்கள், ஆசிரியர்களும் ஈடுபடுத்த உள்ளார்கள். இதில் 18 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் பயனடைய உள்ளார்கள்.

மேலும், முதல் தவணை தடுப்பூசி கோவிஷீல்டு செலுத்திக் கொண்டவர்கள் 84 நாட்கள் கழித்தும், கோவேக்சின் செலுத்திக் கொண்டவர்கள் 28 நாட்கள் கழித்து இரண்டாவது தவணை தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டியவர்கள் அனைவரும் இந்த வாய்ப்பினை முழுமையாக பயன்படுத்திக் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ஜெ.யு.சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், இராமநாதபுரம்.**